IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.555/2013
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 04.00 PM.

பி.வா.சா.1 சாட்சி மகாலிங்கம் த.பெ.சின்னக்கருப்பத்தேவர்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 13.10.2025 in accordance with the provisions of Act XX141.**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

1.பி.வா.சா.ஆ. 1 ஆவணமானது எனது மனைவி பெயரில் உள்ள ஆவணம் என்றால் சரிதான். எனது மனைவி கிரையம் வாங்கினது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். கிரையம் வாங்கும் போது மேற்படி சொத்திற்கு வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் பார்த்தேன். மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது மனைவி பெயரில் வாங்கும் போது மேற்படி சொத்தில் எத்தனை வில்லங்கம் இருந்தது என்றால் அடமானம் எதுவும் இல்லை. எத்தனை வருடங்களுக்கு வில்லங்கம் பார்த்தேன் என்றும் 30 அல்லது 40 வருடங்களுக்கு பார்த்தேனா என்றால் 25 வருடங்களுக்கு பார்த்தேன். எனது தகப்பனார் பெயர் சின்னக்கருப்பத்தேவர் என்றால் சரிதான்.

2. கூடக்கோவில் கிராமத்தில் நல்லாத்தேவர் மகன் மகாலிங்கம் இருந்து இறந்துள்ளார் என்றால் சரிதான். நல்லாத்தேவர் மகன் மகாலிங்கம் என்பவருக்கு அழகுமலை என்பவர் தனக்கு பாத்தியப்பட்ட சொத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

மகாலிங்கம் தான் கிரையம் பெற்ற சொத்தை தனது சகோதரர் பால்பாண்டிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நல்லத்தேவர் மகன் அழகுமலை என்பவர் ஏற்கனவே பால்பாண்டிக்கு 1986ம் வருடத்தில் ஒரு கிரையம் பத்திரம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

3. அழகுமலையின் முதல் மனைவி அழகு என்பவருடன் மிக குறுகிய காலங்கள் மட்டும்தான் சேர்ந்து வாழ்ந்தார் என்றால் சரிதான். அழகுமலையின் மனை அழகு கணவரை விட்டு பிரிந்தபோது தனது மகளையும் சேர்த்து அழைத்துக்கொண்டு சென்றுவிட்டார் என்றால் சரிதான். அரசப்பட்டியை சேர்ந்த பாண்டி என்பவரை திருமணம் செய்து அழகு என்பவர் வாழ்ந்துவந்தார் என்றால் சரிதான்.

4. அரசப்பட்டியில் குடியிருந்தபோதுதான் பி.வா.சா.ஆ– 1 கிரைய ஆவணத்தை 3ம் பிரதிவாதி அழகு என்பவர் எனது மனைவிக்கு எழுதிகொடுத்துள்ளார் என்றால் சரிதான். அழகு என்பவர் தனது குழந்தை சிறு குழந்தையாக இருக்கும்போதே அரசப்பட்டிக்கு சென்றுவிட்டார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ1 கிரையம் எழுதிகொடுக்கும் போது அழகு என்பவரின் மகள் வள்ளிக்கு என்ன வயது இருக்கும் என்றால் சுமார் 30 வயது இருக்கும்.

5.மேற்படி வள்ளியின் என்பவரை குழந்தை பருவத்தில் இருந்து வளர்த்து அவரை திருமணம் செய்து வைத்தது அரசப்பட்டியை சேர்ந்த பாண்டி என்பவர்தான் என்றால் சரிதான். மேற்படி வள்ளியை தவிர 3ம் பிரதிவாதி அழகு என்பவருக்கு அரசப்பட்டியை சேர்ந்த பாண்டி என்பவர் மூலம் 4 குழந்தைகள் பிறந்தார்கள் என்றால் சரிதான். அழகுமலைக்கும்

அவருடைய மனைவி அழகுக்கும் சுமார் 35 ஆண்டுகளாக எந்த தொடர்பும் இல்லை என்றால் சரிதான். அழகுமலை உயிருடன் இருந்தகாலம் வரை கூடக்கோவில் கிராமத்தில்தான் வசித்துவந்தார் என்றால் சரிதான். அவருடை சொத்துக்கள் அனைத்தும் அழகுமலைதான் உயிருடன் இருந்த காலம் வரை அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான்.

6. பி.வா.சா.ஆ2 ஆவணத்தை 3ம் பிரதிவாதி எழுதிகொடுப்பதற்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ– 2 ஆவணத்தை திருப்பிய பிறகுதான் பி.வா.சா.ஆ 1 கிரைய ஆவணம் பெறப்பட்டது என்றும் அதற்குரிய செல் இரசீதை ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்தில் மேற்படி தொடர்பாக இரசீதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதிக்கு பி.வா.சா.ஆ. 2 ஆவணத்தை எழுதிகொடுப்பதற்கு எந்தவித உரிமையும் இல்லை என்றாலும் அதன் அடிப்படையில் பி.வா.சா.ஆ. 1 கிரைய பத்திரத்தை எனது மனைவிக்கு எழுதிகொடுப்பதற்கும் உரிமையில்லை என்றால் சரியல்ல.

7. பி.வா.சா.ஆ3 ஆவணத்தில் கண்ட சொத்தில் எனக்கு உரிமையில்லை என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ3 ஆவணத்தில் கண்ட சொத்தானது வழக்கு 3வது இலக்க சொத்தாகும் என்றால் சரிதான். தாவா 1, 2 இலக்க சொத்துகள் தொடர்பாக நான் தாக்கல் செய்துள்ள 1, 2 ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றும் அதன் அடிப்படையில் எனக்கு உரிமை கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. 1984 ம் ஆண்டு வா.சா.ஆ17 ஆவணம் அழகுமலை என்பவர்

அவர் மனைவிக்கு எழுதிகொடுத்துள்ளதாக சொல்லப்படும் செட்டில்மெண்டு ஆவணம் நடைமுறைக்கே வராத காரணத்தினால் அதன் அடிப்படையில் எழுதப்பட்ட பி.வா.சா.ஆ. 1, 2 ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

8. வா.சா.ஆ.17 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள நோக்கம் நிறைவேற்றப்படாததால் மேற்படி ஆவணம் செயல்பாட்டிற்கே வரவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்தும் வாதிகளுக்கு பாத்தியம் என்று தெரிந்தே வாதிகளின் சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பாத்தியமே இல்லாத ஒரு நபரை அரசப்பட்டி கிராமத்தை சேர்ந்த பாண்டி என்பவரின் மனைவியாக வாழ்ந்துவரும் அழகுமலையின் மனைவி என்று குறிப்பிட்டு மோசடியாக பி.வா.சா.ஆ. 1,2 ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்தும் இந்த வாதிகளுக்கு பாத்தியப்பட்டது, வாதியின் அனுபவத்தில்தான் உள்ளது என்றால் சரியல்ல.

9. பி.வா.சா.ஆ. 1 கிரைய பத்திரத்தை எழுதிகொடுத்த அழகம்மாள் உயிருடன்தான் உள்ளார் என்றால் சரிதான். அவரை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்து சாட்சியம் அளிக்க தயாராக உள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு நிலுவையில் இருக்கும் போது எனது மனைவி இறந்துவிட்டார் என்றால் சரிதான். 6 முதல் 12 பிரதிவாதிகள் எனது பிள்ளைகள்தான் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் அனைத்தும் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும் 26.07.2013ம் தேதி எனது மனைவி பெயருக்கு எழுதிகொடுக்கப்பட்ட கிரைய பத்திரம் செல்லத்தக்கது அல்ல என்று வாதிகள் கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு

கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்தகாலத்திலும் பாக்கியமும் உரிமையும் அனுபவம் இருந்தது கிடையாது என்றால் சரியல்ல. வழக்கிடை சொத்தில் வாதியின் அனுபவத்திற்கு எனது மனைவி மற்றும் 4ம் பிரதிவாதியும் இடையூறு செய்ததால்தான் வாதி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 1, 2 ஆவணங்கள் மூலமாக எங்களுக்கு எந்தவித பாத்திய உரிமையும் தாவா சொத்தில் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

10. வாதி கேட்டுக்கொண்டுள்ள பரிகாரம் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல. நான் தவறான எதிர் வியாஜியம் செய்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 04.45 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.10.13 09:41:20 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.